# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **யூனியனும் அதன் ஆட்சிப்பகுதியும்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# யூனியனும் அதன் ஆட்சிப்பகுதியும்

## யூனியனும் அதன் ஆட்சிப் பகுதிகளும் (சரத்து 1-4)

- இந்திய அரசியலமைப்பு இந்தியாவின் நிலப்பரப்பை, அதாவது ஆட்சிப்பரப்பை தனது முதலாவது பகுதியில் தெளிவாக அறிவிக்கிறது. இப்பகுதியில் நான்கு பிரிவுகள் உள்ளன.

**சரத்து 1. ஆட்சிப் பரப்பு :**

- முதலாவது பிரிவின் சரத்து 1(1)-ன்படி இந்தியா பல மாநிலங்களின் கூட்டிணைப்பு ஆகும். இந்தியா பாரதம் என்ற பெயராலும் வழங்கப்படலாம்.
- சரத்து 1(2) ஆனது மாநிலங்களும், அவற்றின் எல்லைகளும் முதலாம் அட்டவணையில் குறிக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும் எனக் கூறுகிறது.
- சரத்து 1(3) ஆனது இந்தியா எல்லையைப் பற்றி கூறுகிறது.
- மாநிலங்களின் எல்லைகளையும், முதலாம் அட்டவணையில் குறிக்கப் -பட்டுள்ள யூனியன் பிரதேசங்களின் எல்லைகளையும், இந்தியா கையகப் -படுத்தக் கூடுமெனப்படுகிற பிற எல்லைகளையும் உள்ளடக்கி இருத்தல் வேண்டும் எனக் கூறுகிறது.

**சரத்து 2. புதிய மாநிலத்தைச் சேர்த்தல் அல்லது நிறுவுதல் :**

- சரத்து 2-ன்படி பாராளுமன்றம் ஒருசட்டத்தின் வாயிலாகத்தான் பொருத்தமெனக் கருதும் ஒப்பந்த விதிமுறைகள், நிபந்தனைகளின் அடிப்படையில் இந்திய ஒன்றியத்திற் -குள் புதிய மாநிலங்களைச் சேர்த்துக் கொள்ளலாம் அல்லது முற்றிலும் புதிய மாநிலங்களை இந்திய ஒன்றியத்திற் -குள் நிறுவவோ பாராளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கிறது.

**சரத்து 3 . ஒரு புதிய மாநிலத்தை உருவாக்குதல், பரப்புகள், எல்லைகள் மற்றும் பெயர்களை மாற்றுதல்:**

- இந்திய ஒன்றியத்திற்குள் ஒரு புதிய மாநிலத்தை உருவாக்க முடியும். மேலும், ஏற்கனவே இருக்கும் மாநிலங்களின் பரப்புகளை, எல்லைகளை அல்லது பெயர்களை மாற்றவும் முடியும்.

**இப்பிரிவின்படி பாராளுமன்றம் ஒரு சட்டத்தின் வாயிலாக**

1. ஒரு மாநிலத்தின் எல்லையைப் பிரிப்பதாலோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட

மாநிலங்களை அல்லது மாநிலங்-களின் பகுதிகளை இணைப்பதாலோ அல்லது எந்த எல்லையையாவது ஏதாவது ஒரு மாநிலத்தின் பகுதியுடன் இணைப்பதாலோ ஒரு புதிய மாநிலத்தை உருவாக்கலாம்.

2. எந்த மாநிலத்தினுடைய பரப்பையும் குறைக்கச் செய்யலாம்.
3. எந்த மாநிலத்தினுடைய எல்லையையும் மாற்றலாம்.
4. எந்த மாநிலத்தினுடைய பெயரையும் மாற்றலாம்.

**சரத்து 3: கீழ் மசோதா நிறைவேற்றப்படல்:**

1. குடியரசுத்தலைவரின் பரிந்துரையின்படி மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகப்-படுத்தவேண்டும்.
2. குடியரசுத்தலைவர் பாதிக்கப்படும் அந்த மாநில சட்டமன்றத்திற்கு தனது கருத்தை குறிப்பிட்ட காலஅளவிற்குள் தெரிவிக்க அனுப்பப்படல் வேண்டும்.
3. எனினும் அந்த மாநில சட்டமன்றம் வெளியிடும் கருத்து குடியரசுத்தலை-வரையோ அல்லது நாடாளு-மன்றத்தையோ கட்டுப்படுத்தாது.
4. இவ்வாறு மாற்றி அமைக்கும் மசோதா பாராளுமன்றத்தில் **சாதாரண பெரும்பான்மையுடன்** சாதாரண சட்டம் வாயிலாக நிறைவேற்றப்பட வேண்டும்.
5. ஆனால் இவ்வுறுப்பின்படி இந்திய நிலப்பகுதியை அயல்நாட்டிற்கு கொடுக்கமுடியாது. அப்படி ஏதாவது ஒரு நிலப்பகுதியை கொடுப்ப தென்றால் சரத்து 368 கீழ் சட்டதிருத்தம் செய்யவேண்டும்.

❖ தற்பொழுது 29 மாநிலங்களும், 7 யூனியன் பிரதேசங்களும் உள்ளது.

**சரத்து 4. எவ்வாறு, புதிய மாநிலங்களை உருவாக்கலாம் அல்லது மாற்றியமைக்கலாம்** என்ற வழிமுறையை எடுத்துக் கூறுகிறது.

❖ நாம் ஏற்கனவே பார்த்தது போலவே சிறப்பு நடைமுறைகளைப் பின்பற்றாமலேயே எந்தவொரு சட்டத்தையும் இயற்றுவது போல சாதாரண பெரும்பான்மையில் இச்செயலை மேற்கொள்ளலாம்.

**சுதேச மாநிலங்கள் இணைப்பு :**

❖ இந்திய விடுதலைச் சட்டம் 1947, இந்தியா பாகிஸ்தான் என்ற இரு நாடுகளை உருவாக்கியது.

❖ அப்போது இந்திய எல்லைக்குள் 565 சுதேச மன்னராட்சிப் பகுதிகள் அமைந்திருந்தன.

❖ இப்பகுதிகள் யாவும் இந்தியாவுடன் இணைவதற்கோ அல்லது பாகிஸ்-தானுடன் இணைவதற்கோ அல்லது தனித்து சுதந்திர நாடுகளாக

இயங்கவோ இந்திய விடுதலைச் சட்டம் 1947 வழி செய்தது.

- ஏறத்தாழ 562 சுதேசி அரசுகள் இந்திய யூனியனுடன் இணைந்தன.
- மீதமுள்ள 3 சுதேச அரசுகளான **ஹைதராபாத்**, **ஜுனாகத்** மற்றும் **காஷ்மீர்** இணைப்பிற்கு மறுத்துவிட்டன.
- 1. காஷ்மீர் - **1948** இணைக்கப்பட்டது. 2. ஹைதராபாத் - 1948 காவல்துறை நடவடிக்கையாலும், 3. ஜுனாகர் - 1949 ஒப்பந்தம் மக்கள் வாக்கெடுப்பு மூலமாகவும் இந்தியாவுடன் இணைக்கப்பட்டன.
- **சர்தார் வல்லபாய் பட்டேல்**மற்றும் **வி.பி. மேனன்** ஆகியோர் தனது அரசியல் திறமையினாலும் கடுமையான நடவடிக்கைகளாலும் அந்தப் பகுதிகளை இந்திய யூனியனுடன் இணைத்தார்.

**மொழிவாரியான மாநிலங்கள் உருவாக்கம்:**

- 1920 ஆம் ஆண்டு அளவிலேயே காங்கிரஸ் கட்சியின் அமைப்புகள் மொழியின் அடிப்படையில் குறிப்பிட்ட பகுதிகளில் இயக்கத் தொடங்கின.
- விடுதலை அடைந்த பின்னர் மொழியின் அடிப்படையில் மாநிலங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்தது.
- இந்தியாவில் 845 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் 22-மொழிகள் அரசியலமைப்பு சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இக்கோரிக்கையை ஆராய்வதற்காக இந்திய அரசு திரு.எஸ்.கே.தார் அவர்கள் தலைமையில் ஒரு குழு ஒன்றினை **ஜுன் 1948ல்** அமைத்தது.
- அக்குழு **டிசம்பர் 1948ல்** அறிக்கை சமர்ப்பித்தது. தார்க்குழுவானது மாநிலங்கள் நிர்வாக வசதிகளின் அடிப்படையிலேயே பிரிக்கப்பட வேண்டுமேயன்றி மொழியின் அடிப்படையில் பிரிக்கப்படக் கூடாது எனக் கருத்து தெரிவித்தது.
- இக்குழுவின் முடிவுகள் திருப்தி அளிக்காததால் ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், பட்டாபி சீத்தாராமையா ஆகியோர் தலைமையில் மீண்டும் **JVP குழு நவம்பர் 1948-ல்** அமைக்கப்பட்டது.
- இக்குழுவும் மொழி அடிப்படையிலான மாநிலப் பிரிவினையை நிராகரித்தது.
- எனினும், **பொட்டி ஸ்ரீராமலு** என்பவர் தனி ஆந்திர மாநிலம் (1953) கேட்டுப் போராடி உண்ணா நோன்பிருந்து உயிர் விட்டார்.
- இதனால்,**1953 ஆம் ஆண்டு** சென்னை மாகாணத்தில் இருந்து தெலுங்கு பேசும் பகுதிகள் பிரிக்கப்பட்டு, முதல் மொழிவாரி

மாநிலமாக ஆந்திரா உருவாக்கப்பட்டது.

- தனி ஆந்திர மாநிலம் உருவானதைத் தொடர்ந்து பிற பகுதிகளும் மொழிவாரியாகப் பிரிவினைக் கோரிக்கையை முன் வைத்தன.
- இதனால் பசல் அலி, கே.எம்.பனிக்கர் மற்றும் கே.என்.குன்ஷ்ரு ஆகியோரைக் கொண்ட **மூவர் குழு 1953ல்** அமைக்கப்பட்டது. அது தனது அறிக்கையை 1955-ல் சமர்ப்பித்தது.
- இக்குழுவானது மொழிவாரி மாநில மறுசீரமைப்பை ஏற்றுக் கொண்டது. எனினும், ஒரு மொழி ஒரு மாநிலம் எனும் கொள்கையை நிராகரித்தது.
- இந்தியாவின் ஒற்றுமையே முதன் முறையான காரணியாக கணக்கில் கொள்ளப்படவேண்டும் என்று கூறியது.
- மேலும், இக்குழு நடைமுறையில் இருந்து நான்கு வகை மாநிலங்களைப் பகுப்பினை நீக்கக் கோரியது.
- 1955-ல் இக்குழுவின் அறிவுரைகளை ஏற்று மாநில மறுசீரமைப்பு சட்டம் (1956) நிறைவேற்றப்பட்டது.
- இதன்படி 14 மாநிலங்களும் 6 யூனியன் பிரதேசங்களும் நவம்பர் 1, 1956-ல் உருவாக்கப்பட்டன.

**1950-க்கு பிறகு உருவாக்கப்பட்ட மாநிலங்கள் :**

- **ஆந்திரப்பிரதேசம்** மெட்ராஸில் சில பகுதிகளையும் சேர்த்து ஆந்திரப் பிரதேச மாநிலச் சட்டம் 1953-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

1. **குஜராத் மற்றும் மஹாராஷ்டிரா :** பம்பாய் (மறுசீரமைப்பு) 1960ன்படி பம்பாய் மாநிலம் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா என்ற இரு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது.
2. **கேரளா மாநில** மறுசீரமைப்புச் சட்டம் 1956-ன்படி (நவம்பர்) உருவாக்கப்பட்டது. இது திருவாங்கூர் மற்றும் கொச்சின் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது.
3. **கர்நாடகா:** அரசர்களால் ஆளப்பட்ட மைசூர் மாநிலத்தில் இருந்து மாநில மறுசீரமைப்புச் சட்டம் 1956-ன்படி உருவாக்கப்பட்டது. 1973-ல் கர்நாடகா என்று பெயர் மாற்றப்பட்டது.
4. **நாகலாந்து:** நாகலாந்து மாநிலச் சட்டம் 1962ன்படி இம்மாநிலம் அஸ்ஸாமிலிருந்து பிரிக்கப்பட்டது.
5. **அரியானா:** பஞ்சாப் மாநிலத்திலிருந்து பஞ்சாப் மறுசீரமைப்புச் சட்டம் 1966-

ன்படி இம்மாநிலம் அஸ்ஸாமிலிருந்து பிரிக்கப்பட்டது.

6. **இமாசலப் பிரதேசம்** : யூனியன் பிரதேசமாக இருந்த இமாச்சலப் பிரதேசம், இமாச்சலப் பிரதேச மாநிலச் சட்டம் 1970-ன்படி மாநில அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது.

7. **மேகாலயா** : இது 23 அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 1969-ன்படி முதலில் அஸ்ஸாமில் இருந்து துணை மாநிலமாக பிரிக்கப்பட்டது.

8. பின்னர் 1971ம் ஆண்டு வடகிழக்கு பகுதிகள் (மறுசீரமைப்பு) சட்டம் 1971-ன்படி முழுமையான மாநில அந்தஸ்து பெற்றது.

9. **மணிப்பூர், திரிபுரா** : இந்த இரண்டு மாநிலங்களும் வடகிழக்கு பகுதிகள் (மறுசீரமைப்பு) சட்டம் 1971-ன்படி யூனியன் பிரதேசமாக இருந்து மாநில அந்தஸ்துக்கு உயர்ந்தது.

10. **சிக்கிம்:** 35-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 1974ன்படி சிக்கிமிற்கு இணை மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது.

11. **மிசோரம்** : மிசோரம் மாநிலச் சட்டம் 1986-ன்படி முழுமையான மாநில அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டது.

12. **அருணாச்சலப் பிரதேசம்** : அருணாச்சலப் பிரதேச மாநிலச் சட்டம் 1986-ன்படி முழுமையான மாநில அந்தஸ்து பெற்றது.

13. **கோவா** : யூனியன் பிரதேசங்களான கோவா, டையு, டாமன் ஆகியவற்றிலிருந்து கோவா பிரிக்கப்பட்டு கோவா, டாமன் மற்றும் டையூ மறுசீரமைப்புச் சட்டம் 1987-ன்படி மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது. ஆனால், டாமன் மற்றும் டையூ ஆகியன யூனியன் பிரதேசங்களாகவே உள்ளன.

14. **சட்டிஸ்கர்** : 2000 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் மத்திய பிரதேசத்திலிருந்து பிரிக்கப்பட்டு அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் 2000ன்படி உருவாக்கப்பட்டது.

15. **உத்திராஞ்சல்** : 2000 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் நாள் உத்திரப் பிரதேசத்திலிருந்து பிரிக்கப்பட்டு அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் 2000ன்படி உருவாக்கப்பட்டது.

16. **ஜார்கண்ட்** : 2000 ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் நாள் பீகார் மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டு, அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் 2000ன்படி உருவாக்கப்பட்டது.

## யூனியன் பிரதேசங்கள்

- 7வது அரசியலமைப்பு திருத்த சட்டம் **1956ன் மூலம் பிரிவு** A, B மற்றும் C என்ற மாநிலங்களின் வகைகளும் பிரிவு Dன் கீழ் வகைப்படுத்தப்பட்டன.

- மேலும் இந்தியா முழுமையுமாக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் என்று வகைப்படுத்தப் பட்டுள்ளது.

- மாநிலங்கள் அல்லது மாகாணங்கள் என்பதை மத்திய அரசுடன் கூட்டாட்சி உறவு கொண்ட அரசியலமைப்பு அலகுகளாகும்

- அரசியலமைப்பின் **சரத்து 1ன்** படி பாரதமாகிய இந்தியா மாநிலங்களின் ஐக்கியமாகும்.

- பின்வரும் அடிப்படையில் யூனியன் பிரதேசங்கள் அந்தஸ்து மாநிலங்-களின் அந்தஸ்தில் இருந்து வேறுபடுகிறது.

1. அவை அரசியலமைப்பின் கூட்டாட்சி கட்டமைப்பின் பகுதிகளல்ல. எனவே அவை அதிகார பங்கீட்டில் பங்கேற்பதில்லை.
2. அவை குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் **துணைநிலை ஆளுநர்கள்** அல்லது தலைமை ஆணையர்கள் மூலமாக நேரடியாக மத்திய அரசால் நிர்வகிக்கப்படும்.
3. தற்போது 7 யூனியன் பிரதேசங்கள் உள்ளன. அந்தமான் நிக்கோபார் தீவுகள், சண்டிகர், டெல்லி, டாமன் மற்றும் டையூ, தாதர் நாகர் ஹவேலி, லட்சத்தீவுகள் மற்றும் பாண்டிசேரி.

**யூனியன் பிரதேசங்களின் நிர்வாகம்** (Administration of the Union Territories (UTs))

- யூனியன் பிரதேசங்களின் நிர்வாகம் அதன் துணைநிலை ஆளுநர் அல்லது தலைமை ஆணையரை நியமிக்கும் குடியரசுத் தலைவரின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழேயே இருக்கும்.
- பாராளுமன்றத்திற்கு பின்வரும் அதிகாரங்கள் உள்ளன.
- தனது சொந்த சட்டசபைகளை உடைய டெல்லி மற்றும் பாண்டிசேரி ஆகியவற்றை தவிர மற்ற யூனியன் பிரதேசங்களுக்கு சட்டங்கள் இயற்றலாம்.

- ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட யூனியன் பிரதேசங்களுக்கு ஒரு உயர்நீதிமன்றத்தை அமைக்கவோ அல்லது அவற்றுக்கு அருகில் உள்ள உயர்நீதிமன்றத்திற்கு அந்த யூனியன் பிரதேசங்களின் மேல் அதிகாரம் உண்டு என்று அறிவிக்கவோ இயலும்.

- யூனியன் பிரதேங்களிலேயே டெல்லி -க்கு மட்டுமே அதன் சொந்த உயர்நீதி மன்றம் உள்ளது. மற்ற யூனியன் பிரதேசங்களுக்கும் அதன் உயர்நீதி மன்றங்களுக்கும் பின்வருமாறு உயர்நீதி மன்றங்களைப் பெற்றுள்ளன.

- புதுச்சேரி ஒன்றிய பகுதி சட்டமன்றம், புதுச்சேரி (நிர்வாக) சட்டம், 1962ன்படி கீழ்பிரிவு 239A ல் அமைக்கப்பட்டது.

- பிரிவு 239AA மூலம் டெல்லி சட்டமன்றம் தேசிய தலைமையக ஒன்றியமாக அமைக்கப்பட்டது.

- பாண்டிச்சேரியின் சட்டசபை கூட்டத்தொடர் நடைபெறாத போது குடியரசுத் தலைவர் விதிமுறை -களையும் கட்டுப்பாடுகளையும் வகுக்கலாம்.

- யூனியன் பிரதேசங்களில் ஜனநாயக கட்டமைப்பை சட்டத்தின் முன் அமைக்க குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| பெயர் | வருடம் | அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகள் | இடம் |
|---|---|---|---|
| அலகாபாத் | 1866 | உத்திரப்பிரதேசம் | அலகாபாத் (லக்னோவில் ஆயம்) |
| ஆந்திரப் பிரதேசம் | 1954 | ஆந்திரப்பிரதேசம் | ஹைதராபாத் |
| பம்பாய் | 1862 | மகராஷ்டிரம், தாத்ரா மற்றும் நகர் ஹவேலி, கோவா, டாமன் மற்றும் டையூ | மும்பை (ஆயம் நாக்பூர், பாஞ்சி, ஔரங்காபாத் ஆகிய இடங்களில் பெஞ்ச்) |
| கல்கத்தா | 1862 | மேற்குவங்களாம், மற்றும் அந்தமான், நிக்கோபார் | கொல்கத்தா (போர்ட் பிளேயர்) சர்க்யூட் ஆயம் தீவுகள் |
| டெல்லி | 1966 | டெல்லி | டெல்லி |
| கவுகாத்தி | 1948 | அஸ்ஸாம், மணிப்பூர், மேகலாயா, நாகலாந்து, திரிபுரா, மிசோராம், மற்றும் அருணாச்சல பிரதேசம் | கவுகாத்தி (ஆயம் கோஹிமா மற்றும் சர்க்யூட் ஆயம் இம்பால், அகர்தலா மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஷில்லாங் |
| குஜராத் | 1960 | குஜராத் | அகமதாபாத் |
| இமாச்சலப் பிரதேசம் | 1971 | இமாச்சலப்பிரதேசம் | சிம்லா |
| ஜம்மு மற்றும் காஷ்மீர் | 1957 | ஜம்மு மற்றும் காஷ்மீர் | ஸ்ரீநகர் மற்றும் ஜம்மு |
| கர்நாடகம் | 1884 | கர்நாடகம் | பெங்களூர் |
| கேரளா | 1956 | கேரளா மற்றும் லட்சத்தீவுகள் | எர்ணாகுளம் |
| மத்திய பிரதேசம் | 1956 | மத்தியபிரதேசம் | ஜபல்பூர் ஆயங்கள் |
| சென்னை | 1862 | தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி | சென்னை |
| ஒடிசா[1] | 1948 | ஒடிசா | கட்டாக் |
| பாட்னா | 1916 | பீகார் | பாட்னா (ஆயம் ராஞ்சி) |
| பஞ்சாப் மற்றும் ஹரியானா | 1966 | பஞ்சாப், ஹரியானா மற்றும் சண்டிகர் | சண்டிகர் |
| ராஜஸ்தான் | 1950 | ராஜஸ்தான் | ஜோத்பூர் (ஆயம் ஜெயப்பூர்) |
| சிக்கிம் | 1975 | சிக்கிம் | |
| சத்தீஸ்கர் | 2000 | சத்தீஸ்கர் | பிலாஸ்பூர் |
| உத்தரகண்ட்[2] | 2000 | உத்தரகண்ட | நானிடால் |
| ஜார்கண்ட் | 2000 | ஜார்கண்ட் | ராஞ்சி |
| மணிப்பூர்[3] | 2013 | மணிப்பூர் | இம்பால் |
| மேகாலயா[3] | 2013 | மேகாலயா | ஷில்லாங் |
| திரிபுரா[3] | 2013 | திரிபுரா | |